# யா/குப்பிழான் விக்னேஸ்வரா ம.வி



# அதிபர் அறிக்கை

# 2016

# நிகழ்ச்சிநிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம் :-
  1. இ.கஜீபன்
  2. கு.கஜீபன்
  3. யோ. ரஜீபன்

- வரவேற்பு நடனம்
- ஆசியுரை
  சி.கிருஷ்ணசாமிக் குருக்கள்
- வரவேற்புரை
  செல்வி.யோ.சங்கீதா
- தலைமையுரையும் அதிபர் அறிக்கையும்
  அதிபர் - திருவாளர் .க.காராளசிங்கம்
- கௌரவ விருந்தினர் உரை
  திருவாளர் கு.சுரேஷ்குமார் (கணக்காளர்.கமநல சேவைத்திணைக்களம்)
- சிறப்பு விருந்தினர் உரை
  திருவாளர் தம்பிஜயா கணேசநாதன் (வடமாகாண பொலிஸ் அத்தியட்சகர்)
  திருவாளர் .சிவமகாலிங்கம் அரவிந்தன் (அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்திய நிபுணர்.)
- பிரதம விருந்தினர் உரை
  திருவாளர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் திட்டமிடல்)
- பரிசில் வழங்கல்
- மாணவர் கலை நிகழ்வுகள்
- நன்றியுரை
  திருவாளர் சி.மதனமோகனராஜ் (ஆசிரியர்)
- பாடசாலை கீதம்

# யா/குப்பிழான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் குப்பிழான்.

## மகுட வாசகம்

கற்றுக் கற்றாங் கொழுகு

## பணிக்கூற்று

பாடசாலைச் சமூகத்தினை ஒன்றிணைத்து பாடசாலைக்கல்வி அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பாடசாலையை அபிவிருத்தி செய்தல்.

## தொலைநோக்கு

மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளூடாகஎதிர்கால சவால்களுக்கு முகம் கொடுத்து சமூகத்துடன் ஒத்திசைந்து வேலை உலகிற்கு தம்மை தயார்படுத்தும் வகையில் திறன்கள்,தேர்ச்சிகளில் மேம்படைய உதவுதல்.

# பாடசாலை தொடர்பான அடிப்படை விபரம்

1. மாகாணம் :- வடக்கு
2. மாவட்டம் :- யாழ்ப்பாணம்
3. கோட்டம் :- உடுவில்
4. உதவி அரசாங்கப் பிரிவு :- உடுவில்
5. பிரதேசசபை :- வலி தெற்கு உடுவில்
6. தேர்தல் தொகுதி :- மானிப்பாய்
7. கிராமசேவையாளர் பிரிவு :- J/211 குப்பிழான் வடக்கு
8. பாடசாலையின் பெயர் :- யா/ குப்பிழான் விக்கினேஸ்வரா ம.வி
9. பாடசாலையின் முகவரி :- குப்பிழான் வடக்கு குப்பிழான்.
10. பிரதேசசெயலர் பிரிவு :- வலி தெற்கு உடுவில்
11. பாடசாலை ஆண்டு :- 1925
12. பாடசாலை குறியீடு :- 1010008
13. தொகைமதிப்பீட்டு இலக்கம் :- 09178
    பரீட்சை இலக்கம் :-11180
14. பாடசாலை வகை :- 2 - II
15. வகுப்புக்களின் பரம்பல் :- 1 - 11
16. பிரதானமொழிமூலம் :- தமிழ் மொழி
17. இட அமர்வு :- கிராமம்
18. தொலைபேசி இலக்கம்
    அலுவலகம் :- 0212059388
    வீடு :-
    அதிபரது தொலைபேசி :- 0770781854
19. இணையத்தள முகவரி :- kuppilanvigneswaramv@gmail.com

# அதிபர் அறிக்கை

குப்பிழான் பதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சொக்கவளவு சோதி விநாயகப் பெருமானையும் கற்கரை கற்பக விநாயகப் பெருமானையும், கன்னிமார் கௌரி அம்பாளையும் மற்றும் இஷ்ட தெய்வங்களையும் வணங்கி இன்றைய இப்பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள கௌரவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் திட்டமிடல்பிரிவு கல்விப் பணிப்பாளர் திருவாளர் சுவாமிநாதப்பிள்ளை தேவமனோகரன் அவர்களே! சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்துள்ள வடமாகாண பொலிஸ் அத்தியட்சகர் தம்பிஜயா கணேசநாதன் அவர்களே! மற்றும் வைத்திய நிபுணர் திருவாளர் சிவமகாலிங்கம் அரவிந்தன் அவர்களே! கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள கமநல சேவைத் திணைக்களத்தில் கணக்காளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் திருவாளர் குணலிங்கம் சுரேஸ்குமார் அவர்களே! இன்றைய விழா சிறப்புற நடைபெற ஆசியுரை வழங்கிய சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய பிரதம குரு "சைவாகமஜோதி" சிவஸ்ரீ கிருஸ்ணசாமிக் குருக்கள் அவர்களே, வலயக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களே, பாடசாலையின் முந்நாள் அதிபர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவர்களே, உப அதிபர் அவர்களே, சக ஆசிரியர்களே, பெற்றோர்களே, நலன் விரும்பிகளே அன்பான மாணவச் செல்வங்களே உங்கள் அனைவரையும் வரவேற்று வணக்கத்தைக் கூறிக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் 2016ம் ஆண்டிற்கான இன்றைய பரிசளிப்பு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற எமது வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் திருவாளர் சுவாமிநாதப்பிள்ளை தேவமனோகரன் அவர்கள் இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்டவர். சுவாரஸ்யமாகப் பேசி சபையைக் கவரக் கூடிய ஆற்றல் வாய்க்கப் பெற்றவர். தனது வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் தேவைகளை அறிந்து உடனுக்குடன் வளங்களைப் பகிர்ந்தளித்து பாடசாலைகளின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையாகச் செயற்படுபவர்.

இச் சந்தர்ப்பத்திலே எமது பாடசாலைகளின் அவசியத் தேவைகள் சிலவற்றை அவர் முன் சமர்ப்பிக்க எண்ணுகிறேன். அந்தவகையில் நூல்நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடம், கவர்ச்சிகரமான கற்றலை வழங்கக் கூடிய ஆரம்பக் கல்வி வகுப்பறை, சிறுவர் முற்றம். இந்தப் பிரதான மண்டபத்தின் மேல்மாடித்திருத்தம், அதிபர்அலுவலகம் என்பன எமது பாடசாலையின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு மிகமிக அவசியமாக உள்ளன என்பதை அவரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து சிறப்பு விருந்தினராக இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற திருவாளர் வடமாகாண பொலிஸ் அத்தியட்சகர் திருவாளர் தம்பிஐயா கணேசநாதன் அவர்கள் இம் மண்ணின் மைந்தன் எனத் தன்னைச் சொல்லிக் கொள்வதில் மிக விருப்பமுடையவர். கிராமத்தில் உள்ள ஆலயங்கள், விளையாட்டுக் கழகங்கள் பொது அமைப்புக்கள் எனத் தன்னால் ஆன உதவிகளைச் செய்வார். அதுமட்டுமல்லாது எமது பாடசாலை விளையாட்டு வீரருக்கான சீருடையை அன்பளிப்புச் செய்தவர். இந் நிலையில் எமது பாடசாலைகளின் தேவைகள் அவர் அறியாத ஒன்றல்ல. எனவே அவரும் எம் தேவைகளை நிவர்த்தி செய்யத் தம்மால் ஆன பங்களிப்பினை நல்குவார் என எதிர்பார்க்கின்றேன்.

மேலும் சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள திருவாளர் சிவமகாலிங்கம் அரவிந்தன் அவர்கள் இம் மண்ணின் புகழ்பூத்த குடும்பங்கள் ஒன்றில் பிறந்தவர். எமது பாடசாலையின் பழைய மாணவர்.தனது முயற்சியினால் இன்று அகம் சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்திய நிபுணராக யாழ் போதனா வைத்தியசாலையில் சிறப்புறப் பணியாற்றி வருகின்றார். இவரும் எதிர்காலத்தில் எமது பாடசாலையின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் எம்மோடு தோளோடு தோள் கொடுத்து உதவுவார் என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை.

இந்நிகழ்வின் கௌரவ விருந்தினராக வருகை தந்து இந்நிகழ்வை சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற திருவாளர் குணலிங்கம் சுரேஸ்குமார் அவர்கள் எம் மண்ணின்மைந்தன் மட்டுமல்ல எமது பாடசாலையின் செயற்பாடுகளோடு நீண்டகாலமாகத் தொடர்புகளைப் பேணி வருபவர். தற்போது கமநல சேவைத் திணைக்களத்தில் கணக்காளராகப் பணியாற்றி வரும் இவர் கடந்த காலங்களைப் போல எதிர்காலத்திலும் எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும் ஏனைய பௌதீக வளவிருத்தியிலும் அக்கறையுடன் செயற்படுவார் என எதிர் பார்க்கின்றேன்.

இந்நிகழ்விலே ஆசியுரை வழங்குவதற்காக வருகை தந்துள்ள எமது வணக்கத்திற்குரிய குருக்கள் ஐயா கிருஸ்ணசாமிக்குருக்கள் எமது பாடசாலையின் அனைத்து சமய நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிப்பவர். எமது பாடசாலைகளில் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் விழாக்களில் அவர் கலந்து கொண்டு தனது ஆசிகளை எமக்கு வழங்கவேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

## மாணவர் எண்ணிக்கை

இடம்பெயர்விற்கு முன்னர் சுமார் 800 மாணவர்களைக் கொண்டு இயங்கிய இப்பாடசாலை மீளக்குடியமர்வின் பின் படிப்படியாகக் குறைந்து தற்போது 151 மாணவர்களுடன் இயங்குகின்றது. முழுமையான மீளக்குடியமர்வு நடைபெறாமையாலும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகரப் பாடசாலைகளில் சேர்ப்பதனாலும் இந்நிலை ஏற்படுகின்றது. நிறைவான வளங்களுடன் உள்ள இப் பாடசாலையின் மாணவர் தொகையை அதிகரிப்பதற்கு இக்கிராமத்தின் பெற்றோர்களும் பெரியோர்களும் கூடிய பங்களிப்புச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.தற்போதுள்ள மாணவர்களின் வரவிலும் ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன. எனவே பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளின் கல்வியில் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்

## ஆசிரியர்களின் எண்ணிக்கை

தற்போது இப்பாடசாலையில் 15 நிரந்தர ஆசிரியர்களும் இரண்டு பகுதி நேர ஆசிரியர்களும், ஒரு தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியருமாக 17 பேர் (அதிபர் உட்பட) பணியில் உள்ளனர். தற்போது எமது பாடசாலை ஒரு நிறைவான ஆசிரியர் குழாத்தை கொண்டு சிறப்பாக தமது கற்பித்தல் சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. செல்வி சியானி கணேசலிங்கம் அவர்கள் முகாமைத்துவ அலுவலக உதவியாளராக இணைந்து ஆரம்பப் பிரிவில் இருந்து ஆங்கிலப் பாடத்தை கற்பித்து வருகின்றார். கனடா விக்கினேஸ்வரா மக்கள் மன்றத்தினரின் உதவியுடன் பழைய மாணவர் சங்கத்தினூடாக சிறு நிதியை சம்பளமாக வழங்குகின்றோம்.

## கல்விச் செயற்பாடு

நடப்பு வருடம் 01.01.2016 அன்று இப்பாடசாலையில் அதிபர் தரம் IIஅதிபராக பதவி ஏற்றிருந்தேன். மூன்றாம் தவணை ஆரம்பத்தில் வலயக்கல்வி அலுவலகத்தால் செயற்படுத்தப்பட்ட க.பொ.த(சா.த) மாணவர்களுக்கான "S" செயற்றிட்டம் அமுல்ப் படுத்தப்பட்டு காலையிலும் மாலையிலும் மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு ஆசிரியர்களால் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இதன் பயனாக 2016ம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சையில் பரீட்சைக்கு தோற்றிய 11 மாணவர்களில் 05 மாணவர்கள் உரிய தகைமைகளைப் பெற்று உயர்தர வகுப்பில் கல்வியைத் தொடர்கின்றனர். அப்பெறுபேறானது முன்னைய ஆண்டுகளை விட சிறப்பானதாக அமைந்துள்ளது.கற்பித்த ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.இவ்வருடம் ஏழு மாணவர்கள் மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள், மேலதிக விசேட

செயற்றிட்டங்கள், “S” செயற்றிட்டம் என்பன கிரமமாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டிலும் பார்க்க அதிகரித்த வீதத்தில் சித்தியடைவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2015ம் ஆண்டு 9 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இவர்களில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் எவரும் பெற்றிராத போதும் 1 மாணவி 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தார். 5 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்திருந்தார்கள். 2016ம் ஆண்டு 6 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் எவரும் புள்ளிகளைப் பெறவில்லை.எனினும் ஆறு மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100% சித்தியைப் பெற்றிருந்தார்கள். மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்த திருமதி கிருஷ்ணரூபி தேவமோகன், சிவாஜினி மணிவண்ணன், ஆகியோருக்கு எனது நன்றிகள்.

## தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு பகுப்பாய்வு

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் எண்ணிக்கை | 05 | 15 | 18 | 18 | 18 | 08 | 17 | 09 | 06 |
| சித்தியடைந்தோர் சதவீதம் | 100% | 73% | 61 | 55 | 16 | 37.5 | 52.9 | 55 | 100 |
| 70 இற்கு மேல் புள்ளி பெற்ற எண்ணிக்கை | 05 | 11 | 11 | 10 | 03 | 3 | 09 | 05 | 06 |

## க.பொ.த (சா/த) பரீட்சை பகுப்பாய்வு

### மொழி மூலம் :- தமிழ்

| பாடங்கள் | சித்தியடைந்த வீதம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| சைவசமயம் | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 87.5% | 100% |
| தமிழ் | 100% | 38% | 83.3% | 72.2% | 41.6% | 81% | 62.5% | 72.7% |
| 5ஆங்கிலம் | 0 | 0 | 8.3% | 0 | 0 | 9% | 0 | 100% |
| வரலாறு | 66.6% | 39% | 83.3% | 22.2% | 25% | 45.5% | 62.5% | 72.7% |
| விஞ்ஞானம் | 41.6% | 15.3% | 40% | 11.1% | 33.3% | 36.4% | 0 | 36.3% |
| கணிதம் | 41.6% | 23% | 50% | 16.6% | 8.3% | 36.4% | 25% | 27.2% |
| புவியியல் | 75% | 64% | 64% | - | 50% | 0 | - | - |
| குடியுரிமைக்கல்வி | - | - | 100% | 72.2% | 58.3% | 100% | 75% | 63.6% |
| சங்கீதம் | 100% | 60% | 100% | 83% | 100% | 87.5% | - | 80% |
| சித்திரம் | - | - | 67% | 100% | 75% | 66.6% | 60% | 50% |
| நடனம் | - | - | - | - | - | - | 100% | - |
| விவசாயமும் உணவு தொழில்நுட்பமும் | 85.7% | 23.5% | 100% | 94.4% | 41.6% | 63.6% | 62.5% | 100% |
| மனைப்பொருளியல் | 80% | 75% | 50% | - | - | - | - | - |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | - | 100% | 88% | - | - | - | - | 87.5% |
| முயற்சியாண்மை | - | 100% | - | - | - | - | - | - |
| நாடகமும் அரங்கியலும் | - | 100% | - | - | - | - | - | - |
| க.பொ.த (உ/த) தகுதி பெற்றோர் | 05 | 05 | 04 | 03 | 1 | 4 | 2 | 3 |

### இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

2015ம் ஆண்டிற்குரிய இல்ல விளையாட்டுப் போட்டிகள் குப்பிழான் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வெற்றி பெற்ற வீரர்கள் கோட்ட மட்டபோட்டிகளிலும் பங்குபற்றி வெற்றி பெற்றனர். .ஆரம்பப் பிரிவு மாணவர்கள் சித்திரப் போட்டி,கோலப் போட்டி, திருக்குறள் மனனப் போட்டியில் குடும்ப மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றிருந்தனர்.. தெரிவான மாணவர்கள் கோட்டமட்டப் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தனர். 2016ம் ஆண்டு கூட

எமது ஆரம்பப்பிரிவு மாணவர்கள் துரிதகணித போட்டியில் குடும்ப மட்டம், கோட்டமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கோட்டமட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள் கணித விஞ்ஞானப் போட்டிகள் யாவற்றிலும் எமது மாணவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்த்தினப் போட்டியில் குறுநாடகம், பேச்சு ஆகிய போட்டிகளில் எமது மாணவர்கள் கோட்டமட்டப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தனர். மற்றும் நடப்பு ஆண்டிலும் பேச்சு, பாவோதல் ஆகிய போட்டிகளில் எமது மாணவிகள் ஞா.லக்சிகா. 2ம் இடம், யோ.சங்கீதா 3ம் இடம் ஆகிய இடங்களைப் பெற்றுக் கொண்டனர். சமூக விஞ்ஞானப் போட்டியில் எமது மாணவன் செல்வன் சு.நிக்சன் றொபேட் தொடர்ந்து இரு வருடங்களாக வலய மட்டப் போட்டியில் தெரிவாகி மாகாணமட்டப் போட்டிக்கு கலந்து கொண்டார். மற்றும் சர்வதேச உளநல நாள் தினத்திற்காக நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் மாணவன் செ.சாந்தரூபன் மாகாணமட்டப் போட்டிக்கு தெரிவாகியிருந்தார்.

## மன்றச் செயற்பாடுகள்

### இந்து மன்றம்

எமது பாடசாலையுடன் அருகே இணைந்ததாக சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளதால் வெள்ளிக்கிழமைகளில் காலைப் பிரார்த்தனை வழிபாட்டிற்கு ஆலயத்திற்குச் சென்று சிவபுராணம் ஓதுவது வழமையான ஒன்றாகும். நவராத்திரி தினங்களில் மாணவர்களுக்கான சகலகலாவல்லிமாலை மனனம், தோரணம்பின்னுதல், மாலை கட்டுதல், கோலம்போடுதல், ஆகிய போட்டிகளை நடாத்தி மாணவர்க்கு பரிசில்களையும் வழங்கி வருகின்றது. அத்துடன் ஆலயத்தில் நடைபெறும் விஜயதசமி உற்சவத்தையும் பாடசாலை பொறுப்பேற்று செய்து வருகின்றது. சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் பரீட்சைகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி வருகின்றது. இம் மன்றத்திற்கு பொறுப்பாசிரியர்களாக திருமதி செல்வராணி விக்கினேஸ்வரன் அவர்களும் திருமதி சிவாஜினி மணிவண்ணன் அவர்களும் உள்ளனர்.

### கிறிஸ்தவ மன்றம்

பாடசாலையில் கிறிஸ்தவ,கத்தோலிக்க மாணவர்கள் சொற்ப அளவில் இருக்கின்ற போதிலும் சித்திர பாட ஆசிரியராக பணிபுரியும் திருமதி றெகன்சியா ஞானவதனி அலெக்ஸ் பெனடிக்ற் அவர்கள் (பகுதி நேர ஆசிரியர் - 3 நாட்கள்) பொறுப்பாசிரியராக இருந்து மாணவர்க்கு சமயத்தைப் போதிப்பதுடன் செயற்பாடுகளையும் ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றார்.

## சுகாதார மன்றம்

பாடசாலையின் சுத்தம்.மாணவர்களின் சுத்தம் என்பவற்றில் மிக அக்கறையுடன் செயற்படுத்துவதோடு மாணவர்களின் சுகாதார மேம்பாடு தொடர்பாக வரும் சுற்று நிருபங்களுக்கு அமைவாக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. டெங்கு தொடர்பான விழிப்புணர்வுகளையும் அவ்வப்போது மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது. பிரதேச சுகாதார பரிசோதகர் திரு.S.கடம்பரூபன் அவர்களும் பிரதேச வைத்திய அதிகாரிகளும் பாடசாலைக்கு விஜயம் செய்து மாணவர்களின் பல், கண், போசாக்கு தொடர்பான விடயங்களில் கவனஞ் செலுத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.மாணவர்களுக்கான மதிய உணவு தொடர்பாகவும் பொறுப்பாசிரியர் கண்காணிப்பைச் செலுத்தி வருகின்றனர். மன்றத்திற்குப் பொறுப்பாசிரியராக உடற்கல்வி ஆசிரியை திருமதி ஜெயாளினி குமாரகிருஷ்ணன் அவர்கள் சிறப்பான பணி செய்து வருகின்றார்.

## தமிழ் மன்றம்.

பாடசாலை மட்டத்தில் தமிழ்த்தினப் போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்கள் கோட்டமட்ட நிகழ்வுகளில் பங்குபற்றினர். அத்துடன் ஏனைய நிறுவனங்கள் கல்வித் திணைக்களத்தினூடாக நடாத்தும் போட்டிகளிலும் மாணவர்களைப் பங்குபற்றச் செய்து ஊக்குவித்து வருகின்றது. அம் மன்றத்திற்குப் பொறுப்பாசிரியராக திரு.சி.மதனமோகனராஜ் அவர்கள் செயற்படுகின்றார்

## ஆங்கில மன்றம்

பாடசாலை மட்டத்தில் ஆங்கிலத் தினப் போட்டிகள் நடாத்தப்பட்டு கோட்டமட்டப் போட்டிகளிலும் பங்குபற்றினர். பொறுப்பாசிரியர்களாக திருமதி துசிதா பகீதரனும் செல்வி. சியாளி கணேசலிங்கமும் உள்ளனர்.

## ஏனைய மன்றங்கள்

பாடசாலையில் சமூக விஞ்ஞான மன்றம்,விஞ்ஞான கணித மன்றம்,விவசாய மன்றம் என்பனவும் செயற்பட்டு வருகின்றது. இவற்றுக்கு முறையே திருமதி சுகந்தினி மதியழகன், திருமதி ராஜினி இறகுலன், திரு.க.ஆதவன், திரு க.நவரத்தினம் ஆகியோர் பொறுப்பாசிரியராக உள்ளனர்.

## விசேட கல்வி

இப் பாடசாலையில் தற்போது கற்கின்ற மாணவர்கள் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். பெற்றோரின் முழுமையான கண்காணிப்புக்கள் இன்மையால் உடற்சோர்வு, புத்திகுறைபாடு, பார்வைக் குறைபாடு, கண்கூச்சம், பல்லினக் குறைபாடுகள் போன்றவற்றால் பாதிப்புற்றவர்கள் உள்ளனர். இவர்கள் இனங்காணப்பட்டு வைத்தியரின் ஆலோசனைக்கு உட்படுத்தப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவர்களுக்கு சிசேட மேலதிக கற்றல் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. விசேட கல்வி ஆசிரியர் திருமதி நிதர்சினி விபுலானந்தன் பொறுப்பாசிரியராகச் செயற்பட்டு வருகின்றனர்.

## வழிகாட்டல் ஆலோசனை

எமது பாடசாலைக்கு வழிகாட்டல்,ஆலோசனைக்கு அதற்கென பயிற்றுவிக்கப்பட்ட ஒருவர் இல்லாத நிலையிலும் செல்வி ராகினி கந்தையா அவர்கள் பொறுப்பாக இருந்து சிறந்த முறையில் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்றார்.

## மதிய உணவு

பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் உலக உணவுத் திட்டத்திற்கமைவாக எமது பாடசாலையிலும் உணவு வழங்கப்படுகின்றது. இதற்கு பொறுப்பாசிரியர்களாக திருமதி ராஜினி இறகுலன்,திருமதி ஜெயாளினி குமாரகிருஷ்ணன் ஆகியோர் செயற்படுகின்றனர்.

## கணினிப் பிரிவு

கணினிக் கூடம் 20x20 அளவுள்ள வகுப்பறையொன்றில் தனியாக அமைக்கப்பட்டு 10 கணினிகளுடன் செயற்படுத்தப்படுகின்றது. ஆரம்பப் பிரிவிலிருந்து தரம் 11 வரையான மாணவர்கள் கணினிக்கூடத்தைப் பயன்படுத்துகின்றனர். வரலாறு பாட ஆசிரியர் திருமதி சு.மதியழகன் பொறுப்பாக இருந்து செயற்படுகின்றார்.

## நூல் நிலையம்

20x20 அளவுள்ள வகுப்பறையொன்றில் தனியாக அமைக்கப்பட்டு மாணவர்கள் பயன்படுத்துகின்றனர். திருமதி செல்வராணி விக்கினேஸ்வரன் அவர்கள் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்றார்.

## ஆசிரியர் கழகம்

ஆசிரியர்களின் நலன்களுக்காகச் செயற்படும் இக்கழகமானது ஆசிரியர்களின் குடும்ப வைபவங்களிலும் துக்க நிகழ்வுகளிலும் பங்கு பற்றி வருகின்றது. ஆசிரியர்களின் பிரியாவிடை நிகழ்வுகளையும் நடாத்தி வருகின்றது.கழகத்தின் செயலாளராக திருமதி ராஜினி இறகுலனும், பொருளாளராக திருமதி சண்முகவதனி கிருஷ்ணகுமார் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

## மாணவத் தலைவர்கள்

2016ம் ஆண்டிற்கான மாணவர் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு சின்னம் சூட்டல் நிகழ்வுகள் நடைபெற்றது. மாணவர்கள் தமது பணியை சிறப்பாக செய்து வருகின்றனர். சிரேஷ்ட மாணவத் தலைவனாக வ.பிரகாஸ், சிரேஷ்ட மாணவி தலைவியாக க.சஞ்சிதா ஆகிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உபசிரேஸ்ட மாணவர் தலைவராக சு.நிக்சன் றொபேட். உபசிரேஷ்ட மாணவத் தலைவியாக யோ.சங்கீதாவும் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். பொறுப்பாசிரியராக திருமதி.ரா.இறகுலன் அவர்கள் செயற்பட்டு வருகின்றார்.

## ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர் விபரம்

1. திரு.க.காராளசிங்கம்
2. திரு.சி.மதனமோகனராஜ்
3. திருமதி.ஜெ.குமாரகிருஷ்ணன்.
4. திரு.க.ஆதவன்
5. திருமதி.கி.தேவமோகன்
6. செல்வி.க.ராகினி
7. திருமதி.சு.மதியழகன்
8. திருமதி.ரா.இறகுலன்

## இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள்

இப் பாடசாலையில் 2013ம் ஆண்டு அதிபராக கடமையேற்று தனது பணியை சிறப்பாக ஆற்றி சுகவீனம் காரணமாக இடமாற்றம் பெற்று யா/தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு.த.தவராஜா அவர்களை அவர் பணி சிறக்கவும், மேலும் நலத்துடன் வாழவும் வேண்டுகின்றோம்.

இப்பாடசாலையில் ஏழு வருட காலங்களுக்கு மேலாக பணியாற்ற, ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அன்பிற்குப் பாத்திரமான எமது தமிழ்பாட ஆசிரியராகவும் உப அதிபராகவும் தனது கடமையை சிறப்புற பணியாற்றிய திருமதி விஜயராணி கிருபாரூபன் அவர்கள் ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். அவர் பணி சிறக்கவும், மேலும் நலத்துடன் வாழவும் வேண்டுகின்றோம்.

## இளைப்பாறியோர்

எமது பாடசாலையில் 6 வருடங்களாக தனது உன்னத சேவையை வழங்கி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திருமதி ஜெ.தயாகுணன் ஆசிரியர் அவர்களது பிரியாவிடை வைபவம் காண்பவர் வியக்கும் வண்ணம் மிகச் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. அவர்களது ஓய்வுக்காலம் மிக சிறப்பாக இருக்க என்றும் இறைவன் திருவருள் புரிவார்.

## புதிதாக இணைந்தோர்

இவ்வருடம் இப்பாடசாலையில் ஆரம்பப் பிரிவிற்காக திருமதி உதயக்கமலம் செல்வரத்தினம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். அவர்கள் சேவை எமது மாணவரின ஊக்கத்தை மேலும் வலுப்படுத்தும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அத்துடன் தமிழ் பாடத்திற்கு ஆசிரியர் இல்லாதவிடத்து இதே குப்பிழான் கிராமத்தைச் சேர்ந்த திரு.சி.மதனமோகனராஜ் ஆசிரியர் அவர்கள் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இருந்து இங்கு நியமிக்கப்பட்டு தனது பணியை செவ்வனே ஆற்றி வருகின்றார். அவர்கள் மாணவர் கல்வியில் காட்டும் ஊக்கமானது சிறந்த பெறுபேற்றை பெற வழிவகுக்கும் என்ற நம்பிக்கையை எமக்களிக்கின்றது.

## பாடசாலை அபிவிருத்திக் குழு (S.D.C)

பாடசாலை அனைத்து செயற்பாடுகளும் பாடசாலை அபிவிருத்திக் குழுவினது அங்கீகாரத்துடன் செயல் வடிவம் பெறவேண்டும் என்ற முனைப்பில் 2011ம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு 2013ம் ஆண்டிலிருந்து பாடசாலைக்கு வரும் நிதிகள் யாவும் பாடசாலை அபிவிருத்திக் கணக்கினூடாக செயற்படுத்தப்படுகின்றது. இக்குழுவின் தலைவராக பாடசாலை அதிபர் செயற்படுவர்.

## செயற்குழுவின் விபரம்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.க.காராளசிங்கம் (அதிபர்) |
| செயலாளர் | :- | திரு.சி.கணேசநாதன் (பெற்றோர்) |
| பொருளாளர் | :- | திரு.க.ஆதவன் |
| வலயப் பிரதிநிதி | : | - |

**உறுப்பினர்கள்**

திருமதி.சு.மதியழகன் (ஆசிரியர்)
திருமதி.சி.மணிவண்ணன் (ஆசிரியர்)
திரு.இ.சி.தெட்சணாமூர்த்தி
(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)
திருமதி.ர.வசந்தகுமாரி (பெற்றோர்)
திரு.சி.மதனமோகனராஜ் (ஆசிரியர்)
திருமதி.ஜீ.நேசமலர் (பெற்றோர்)
திருமதி.அ.சதீஸ்வரி (பெற்றோர்)
திரு.ம.விபுலானந்தன்(பழையமாணவர்)

## பழைய மாணவர் சங்கம் (O.S.A)

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் தனது மிகச் சிறப்பான பணியை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. முகாமைத்துவ அலுவலக உதவியாளரின் சம்பளம் மற்றும் பிற தேவைகள் இதற்கூடாக நிறைவேற்றப்படுகின்றன.

தலைவர் :- திரு.க.காராளசிங்கம் (அதிபர்)
உபதலைவர் :- திரு.இ.சி.தெட்சணாமூர்த்தி (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)
செயலாளர் :- திரு.ம.விபுலானந்தன் (பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வலி வடக்கு)
பொருளாளர் :- திருமதி.சு.மதியழகன் (ஆசிரியர்)
திரு.சோ.பரமநாதன் :- (கிராம உத்தியோகத்தர் ஈவினை)
திரு.தி.சசிதரன் :- (ஆசிரியர்,இணுவில் இந்துக்கல்லூரி)

### பாடசாலை முகாமைத்துவக் குழு

1. திரு.க.காராளசிங்கம் (அதிபர்)
2. திரு.க.ஆதவன் (ஆசிரியர்)
3. திரு.சி.மதனமோகனராஜ் (ஆசிரியர்)
4. திருமதி.ப.சிறிக்குமரன்
5. திருமதி.ரா.இறகுலன.

### கொள்வனவுக்குழு

1. திரு.க.ஆதவன்
2. திருமதி.சு.மதியழகன்
3. திரு.சி.மதனமோகனராஜ்
4. திருமதி.சி.மிவண்ணான்

## தொழில்நுட்பக்குழு

1. திரு.க.ஆதவன்
2. திரு.சி.மதனமோகனராஜ்
3. திரு.க.கணேசநாதன்
4. திரு.ம.விபுலானந்தன்.

## பாடசாலை ஆசிரியர்கள் அலுவலர்கள்

| | |
|---|---|
| திரு.கனகசபை.காராளசிங்கம் | G.C.E (A/L) Trained Commerce SLPS –II |
| திரு.கனகரத்தினம் ஆதவன் | Dip.in.Teach (Maths) SLTS-III |
| திரு.கந்தன். நவரத்தினம் | B.A (Dip.in.Edu) Trained (Agriculture) SLTS-2- |
| திரு.சிவதாசன்.மதனமோகனராஜ் | B.A (Dip.in.Edu) SLTS-II |
| திருமதி.சண்முகவதனி.கிருஸ்ணகுமார் | Dip.in.Teach (Primary) SLTS-2-I |
| திருமதி.கிருஸ்ணரூபி.தேவமோகன் | Dip.in.Teach (Primary) SLTS-2-II |
| திருமதி.பகீரதி.சிறீகுமரன் | Trained Commerce SLTS-I |
| திருமதி.சிவாஜினி.மணிவண்ணன் | B.A (Dip.in.Edu) SLTS-2-I |
| திருமதி.ராஜினி.இறகுலன் | Trained Science SLTS-2-II |
| திருமதி.றதீப்தா.நிஷாந்தன் | Dip.in.Teach (Dance) SLTS-3-I |
| திருமதி.செல்வராணி.விக்கினேஸ்வரன் | B.A (Dip.in.Edu) SLTS-2-I |
| திருமதி.சுகந்தினி.மதியழகன் | B.A (Hons) SLTS-2-II |
| திருமதி.துசிதா.பகீதரன் | H.N.D in Management Trained (English) SLTS-II |
| திருமதி.ஜெயாழினி.குமாரகிருஸ்ணன் | G.C.E (A/L) (B.Com) SLTS-2-II |
| திருமதி.ஞானவதனி.அலெக்ஸ்பெனடிக்ற் | B.F.A (Art & Design) SLTS-2-II |
| திருமதி.நிதர்சினி.விபுலானந்தன் | Dip.in.Teach (Spe.Edu) SLTS-3-I |
| செல்வி.கந்தையா.ராகினி | B.F.A (Music) SLTS-2-II |
| திருமதி.உதயக்கமலம்.செல்வரட்ணம் | G.C.E (A/L) Trained Primary SLTS-I |

## முகாமைத்துவ அலுவலக உதவியாளர்.

செல்வி.க.ஷியானி

## கல்வி சாரா உத்தியோகத்தர்கள் :-

திரு.சுப்பிரமணியம்.சுபாஸ்கரன் - School Labourer , O.E.S

திரு.இராசதுரை.நிறஞ்சன் - Watcher ,O.E.S

## பரிசளிப்பு விழாவிற்கு நிதி வழங்கியவர்கள்

- திரு.திருமதி.நமசிவாயம்.கனகம்மா ஞாபகார்த்தமாக சுவிஸ் நாட்டில் வசிக்கும் திரு.மு.தர்மபாலன் அவர்கள் திரு.சோ.பரமநாதன் ஊடாக ரூபா 25,000/= ஐ அன்பளிப்பு செய்திருக்கின்றனர் இவர்களுடைய சேவை தொடர்ச்சியாக கிடைத்து வருகின்றது பரிசளிப்பு விழாவினை சிறந்த முறையில் மேலெடுத்து செல்வதற்கு இது பேருதவியாக அமைகின்றது இச்சேவை என்றும் நிலைத்திருக்க வேண்டும் எனக் கேட்டு இவரகளை பல்லாண்டு காலம் வாழ என வாழ்த்துவதோடு நன்றியினையும் தெரிவிக்கிறோம்
- Dr.மகாலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது மகன் திரு.ம.கண்ணன் (லண்டன்) பரிசுக்குரிய நூல்களை வாங்குவதற்காக இம்முறை ரூபா 30,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார் இவர்களுடைய சேவை தொடர்ந்து பரிசளிப்பு விழாவை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு உதவுகின்றது. இவர்களையும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரிவித்து கொள்கின்றோம்
- பரிசளிப்பு விழா சிற்றுண்டிக்கும் மாணவர் உணவுக்குமாக சிங்கப்பூரில் வாழ்ந்து வரும் திரு.கிருஸ்ணர் ஐயா அவர்கள் ரூபா 15,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார் தனது 99 ஆவது அகவையில் தனது அயராத உழைப்பினாலும் பாடசாலையின் மாணவர் நலன் கருதி செயற்படும் ஓர் மாமனிதர் ஆவார் இவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து எமது பாடசாலைக்கு சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துவதோடு மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்
- எமது பாடசாலையில் 30 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி அமரத்துவம் அடைந்துள்ள திருமதி.அழகம்மா.தில்லைநாதன் அவர்கள் நினைவாக அவரது மகன் திரு.தி.ரவீந்திரநாதன் அவர்கள் ரூபா 3,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்.
- எமது பரிசளிபபு விழா சிறந்த முறையில் நடைபெறுவதற்கு திரு.நாகமணி சிறிகரன் அவர்கள் 20,500/= ஒரு சோடி குத்து விளக்கினை அன்பளிப்பு செய்துள்ளார். இவருடைய குடும்பத்தினர் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வாழ்த்துவதோடு எனது நன்றியினையும் மனப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவும் கரங்கள்

- எமது பாடசாலையின் விளையாட்டுப்போட்டியைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு குப்பிழான் மைந்தர்களால் சுவிஸ் நாட்டில் உதவும் கரங்கள் என்ற அமைப்பினாலே ரூபா 71,500/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார் இவர்கள் என்றென்றும் எமது பாடசாலைக்கு உதவுவார்கள் என்பதில் ஐயமில்லை இம்

மன்றத்தின் சகல அங்கத்தவர்களையும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ வேண்டுமென வாழ்த்துவதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- கனடா - மொன்றியல் விக்கினேஸ்வரா கலைவாணி கலா மன்றத்தினர் மாணவர்களுக்கான மதிய உணவு சமைப்பதற்கான மரக்கறிகளை (நாளாந்தம் ரூபா 500.00) அவர்கள் பாடசாலைக்கு வழங்கி வருகின்றார்கள். இவர்களுடைய சேவை சிறக்க மன்றத்தினர் அனைவரையும் சிறப்புற வாழ வேண்டும் என்று வேண்டிக்கொண்டு நன்றிகளையும் தெரிவித்தக் கொள்கின்றோம்.
- எமத பாடசாலையின் முன்பள்ளி கட்டட வேலைகளுக்காக ரூபா 55,000/= தையும் நூலகத்திற்கான கூரை வேலையையும் கனடா விக்னேஸ்வரா மன்றத்தினர் திருவாளர் பாலசுப்பிரமணியம் ஊடாகச் செய்து தந்துள்ளனர். குப்பிழான் விக்கினேஸ்வரா கனடா மன்ற அங்கத்தவர்கள் அனைவரும் பல சிறப்புக்கள் பெற்று வாழ வேண்டுமென்று வேண்டி நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- எமது பாடசாலையின் அபிவிருத்திக்காக சுவிஸில் வாழும் திரு.விசுவலிங்கம்.நாகேஸ்வரன் என்பவர் ரூபா 25,000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- எமது பாடசாலையின் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான விசேட கணித வகுப்பு நடாத்துவதற்கான இவ்வருடம் தொடக்கம் மாதாந்த கொடுப்பனவாக திருமதி. நமசிவாயம் கனகம்மா நினைவாக திருவாளர் மு.தர்மபாலன் ரூபா 2,500/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்
- சிறுவர்தின விழாவிற்கு லண்டன் விக்கினேஸ்வரா மன்றம் ரூபா 20,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளனர்.
- எமது பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டிக்கான பந்தல் சேவையை திரு.செ.நவரட்ணராஜா இலவசமாக வழங்கி வருகிறார்.
- புத்தகப்பை சப்பாத்து கற்றல் உபகரணங்கள் ஆகியன உடுவில் பிரதேச செயலகத்தினால் எமது பாடசாலை மாணவர்கள் 10 பேருக்கு வழங்கப்பட்டது
- திரு.மோகன் ஞாபகார்த்தமாக உதைபந்தாட்ட வீரர்களுக்கான 11 சோடி காலணிகள் வழங்கப்பட்டது.
- எமது பாடசாலை உதைபந்தாட்ட மாணவர்களுக்காக J.C ஐ வடமாகாண பொலிஸ் அத்தியட்சகர் திரு.த.கணேசநாதன் அன்பளிப்புச் செய்துள்ளார்
- திரு.திருமதி.கனகரத்தினம்.கனகம்மா ஞாபகார்த்தமாக அவர்களது மகன் கனகரத்தினம்.கலைச்செல்வன் எமது பாடசாலை மாணவர்களுக்கான சீருடைக்காக ரூபா 15,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்
- திரு.இராசா.தனக்குமார் அவர்கள் மாணவர்களுக்காக சுவிஸிலிருந்து இனிப்புப் பண்டங்களை கொண்டு வந்து வழங்கினார்.

- எமது பாடசாலையின் மாணவர்களுக்கான கோட்டமட்ட வில்லிசை போட்டிக்காக ரூபா 9,100/= பெறுமதியான வேட்டிக்கான செலவை ஏழாலை வசந்த நாகபூசணி அம்மன் தேவஸ்தானம் வழங்கிபிருந்தது.
- செல்வி.க.ஷியானி தனது பிறந்தநாள் அன்பளிப்பாக முன்பள்ளி சீருடைக்காக ரூபா 10,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்
- திரு.க.சிவஞானசுந்தரம் பாடசாலை நூல்நிலையத்திற்கான அலுமாரிக் கொள்வனவிற்காக ரூபா 9,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்
- திரு.கந்தையா.கயன் பாடசாலை மாணவர்களில் 10 பேருக்கு காலணிகள் வழங்கினார்.
- திருமதி பொ.மணிமேகலை மாணவர்களுக்கான பாதணிகளுக்காக ரூபா 5,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்
- திரு.நா.செல்வரத்தினம் எமது பாடசாலை விளையாட்டுப்போட்டிக்காக ரூபா 2,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்.
- திரு.த.சிவலிங்கம் எமது பாடசாலை விளையாட்டுப்போட்டிக்காக ரூபா 1,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்
- திரு.சி.சிங்கராஜா எமது பாடசாலை விளையாட்டுப்போட்டிக்காக ரூபா 1,000/= ஐ அன்பளிப்பு செய்துள்ளார்
- திரு.செ.குமாரவேல் (சாப்பாட்டுக்கடை) பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 500/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- திரு.தி.சிவலிங்கம் (சைக்கிள்கடை) பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 200/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- திரு.த.சிவஞானரஞ்சன் பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 500/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- திருமதி.த.வசந்தகுமாரி பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 500/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- திரு.வி.செந்தில்குமார் பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 200/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- சிவம் மல்ரி ஸ்பொட் பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 2,000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- அக்ஷயா கடை பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 2,000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- டிலக்ஸ் ஹொட்டல் பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 2,000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்

- A.R.G பேக் கவுஸ் பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 1,000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- திவானா கடை பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 1,000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- மு.தவராசா பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 200/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- பிள்ளையார் ஸ்ரோர் பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 2,000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்
- திரு.ப.விமலச்சந்திரன் பரிசளிப்பு விழாவிற்கு ரூபா 1,000/= ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்


இவர்களின் உதவியும் எமது பாடசாலைக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமென வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## நன்றியுரை


- எமது பாடசாலையின் சகல விழாக்களிலும் கலந்து எம்மையெல்லாம் ஆசீர்வதித்து ஆசியுரை வழங்கும் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய பிரதமகுரு சைவாகமஜோதி சிவஸ்ரீ கிருஸ்ணசாமிக்குருக்கள் அவர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
- இன்றைய இப் பரிசளிப்பு விழாவில் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கும் பரிசில்களை வழங்கி அவர்களுக்கு ஊக்கமளித்த பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர் கௌரவ விருந்தினர் ஆகியோருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- பாடசாலையின் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு நல்கி ஆசிரியர் தேவைகளையும் நிறைவு செய்து பாடசாலைக்கு வந்து கண்காணித்து ஆலோசனைகள் வழங்கிச் செல்லும் எமது மதிப்புக்குரிய வலயக்கல்விப்பணிப்பாளர் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கணக்காளர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் வலய கோட்ட உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- பாடசாலையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி நிதியுதவி மற்றும் பொருளுதவி செய்து வரும் புலம்பெயர் சமூகத்தினருக்கும் குப்பிழான் வாழ் சமூகத்தினருக்கும் கனடா மொன்றியல் கலைவாணி மன்றம் கனடா விக்கினேஸ்வரா மன்றம் லண்டன் விக்கினேஸ்வரா மன்றம் சுவிஸ் உதவும் கரங்கள் இவ் அனைத்து மன்றங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

- எமது அழைப்பை ஏற்று இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெரியோர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்
- எமது பாடசாலையில் தொடர்ந்து நல்லுறவைப் பேணி செயற்பட்டு வரும் எமது குப்பிழான் வடக்கு கிராம உத்தயோகத்தர் திரு.ந.நவசாந்தன் அவர்களுக்கும் சுகாதாரப் பரிசோதகர் திரு.S.கடம்பரூபன் அவர்களுக்கும் எமது பாடசாலையின் செய்திகளை உடனுக்குடன் உலகெங்கும் பரவிட உதவும் குப்பிழான.net மற்றும் தினக்குரல் ஊடகவியலாளர் ரவிஷாந் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- நிறைவாகப் பாடசாலையின் வளர்ச்சிக்காக என்னுடன் இணைந்து பணியாற்றும் உபஅதிபர் ஆரம்பபிரிவு பொறுப்பாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயற்குழு உறுப்பினர்கள் பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகூறி நிறைவு செய்கின்றேன்.

பாடசாலையின் நிகழ்வுகள் சில








ஆசிரிய ஆளணி





மாணவ தலைவர்கள்



| வகுப்பு ரீதியாக பரிசில் பெறுவோர் | | |
|---|---|---|
| தரம் | மாணவர் பெயர் | பாடங்களும் நிலைகளும் |
| 1 | ம.விஷாந்தனா | சமயம் தமிழ் சுற்றாடல் பொதுத்தேர்ச்சி 1ம் இடம்<br>கணிதம் 2ம் இடம் |
| | ர.அபிநயா | தமிழ் சுற்றாடல் பொதுத்தேர்ச்சி 2ம் இடம் |
| | ர.வனுஜா | சமயம் 2ம் இடம் சுற்றாடல் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| | சு.துவாரகன் | கணிதம் 1ம் இடம் |
| | ர.லக்சனா | கணிதம் 3ம் இடம் |
| | க.ஜிலோசனா | தமிழ் சமயம் 3ம் இடம் |
| 2 | த.கவிவாணன் | தமிழ் சுற்றாடல் சமயம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம்<br>கணிதம் ஆங்கிலம் 2ம் இடம் |
| | ர.கிருத்திகா | ஆங்கிலம் கணிதம் தமிழ் சுற்றாடல் சமயம் பொதுத்தேர்ச்சி 2ம் இடம் |
| | ர.சிவதரணிகா | தமிழ் கணிதம் சுற்றாடல் சமயம் ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| 3 | இ.தமிழினி | தமிழ் சமயம் கணிதம் சுற்றாடல் ஆங்கிலம்பொதுத்தேர்ச்சி 1ம் இடம் |
| | ஜெ.யாழினி | தமிழ் சமயம் கணிதம் சுற்றாடல் ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி 2ம் இடம் |
| | மோ.சங்கவி | தமிழ் சமயம் கணிதம் சுற்றாடல் ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| 4 | சி.யதுசன் | தமிழ் கணிதம் சுற்றாடல் சைவசமயம் ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம் |
| | வ.பானுசா | தமிழ் கணிதம் சுற்றாடல் சைவசமயம் ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி 2ம் இடம் |
| | ப.ஜனித்தா | தமிழ் கணிதம் சைவசமயம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| | அ.வைஷ்ணவி | சுற்றாடல் ஆங்கிலம் 3ம் இடம் |
| | ர.அன்பரசன் | ஆங்கிலம் 3ம் இடம் |
| 5 | ச.மயூரி | தமிழ் கணிதம் சுற்றாடல் சமயம் ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம் |
| | இ.பிரசாளினி | தமிழ் சமயம் ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி 2ம் இடம்<br>கணிதம் சுற்றாடல் 3ம் இடம் |
| | பா.துர்க்கா | கணிதம் சுற்றாடல் 2ம் இடம்<br>தமிழ் சமயம் ஆங்கிலம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| 6 | ஜீ.கார்த்திகா | சமயம் தமிழ் ஆங்கிலம் புவியியல் வரலாறு சுகாதாரம் குடியுரிமை<br>செயன்முறைத் தொழினுட்பம் சங்கீதம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம்<br>கணிதம் விஞ்ஞானம் 2ம் இடம் |
| | சு.சுனோஜன் | கணிதம் விஞ்ஞானம் சித்திரம் 1ம் இடம்<br>தமிழ் புவியியல் வரலாறு சுகாதாரம் குடியுரிமை செயன்முறைத் தொழினுட்பம்<br>பொதுத்தேர்ச்சி 2ம் இடம் |
| | ப.யலக்சன் | சமயம் தமிழ் கணிதம் ஆங்கிலம் விஞ்ஞானம் புவியியல் குடியுரிமை<br>செயன்முறைத் தொழினுட்பம் சித்திரம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| | க.பௌத்திரா | சைவசமயம் நடனம் 1ம் இடம்<br>வரலாறு சுகாதாரம் 3ம் இடம் |
| | மு.அபர்ணா | ஆங்கிலம் நடனம் 2ம் இடம் |

| | | |
|---|---|---|
| | ச.தர்சிகா | சங்கீதம் 2ம் இடம் |
| | ஜெ.கிந்துசன் | சித்திரம் 2ம் இடம் |
| | சி.அபிசன் | சங்கீதம் 3ம் இடம் |
| | அ.அபிநயா | நடனம் 3ம் இடம் |
| 7 | ந.மயூரன் | விஞ்ஞானம் குடியுரிமை கணிதம் சித்திரம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம்<br>புவியியல் சுகாதாரம் 2ம் இடம்<br>தமிழ் ஆங்கிலம் செயன்முறை தொழினுட்பம் 3ம் இடம் |
| | ஞா.லக்சிகா | சைவசமயம் தமிழ் வரலாறு சுகாதாரம் செயன்முறைத்தொழினுட்பம் நடனம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம்<br>விஞ்ஞானம் குடியுரிமை 2ம் இடம் |
| | ற.அபிஷேக்கா | தமிழ் கணிதம் சித்திரம் 2ம் இடம்<br>சைவசமயம் விஞ்ஞானம் வரலாறு புவியியல் சுகாதாரம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| | இ.புஸ்பாஞ்சலி | புவியியல் 1ம் இடம்<br>வரலாறு செயன்முறைத்தொழினுட்பம் 2ம் இடம்<br>குடியுரிமை கணிதம் சித்திரம் 3ம் இடம் |
| | சி.நெருப்பிரியா | சங்கீதம் 1ம் இடம்<br>சைவசமயம் 2ம் இடம் |
| | சு.சுதர்சனா | நடனம் 2ம் இடம் |
| | ர.சரணியா | நடனம் 3ம் இடம் |
| | மு.அபிராம் | சங்கீதம் 2ம் இடம் |
| | ஈ.கஜானா | சங்கீதம் 3ம் இடம் |
| | வ.பவுல்ராஜ் | சங்கீதம் 3ம் இடம் |
| 8 | ஜீ.டினேசன் | சமயம் தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம் வரலாறு புவியியல் குடியுரிமை சுகாதாரம் கணிதம் செயன்முறைத்தொழினுட்பம் சங்கீதம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம் |
| | இ.யசோதராதேவி | தமிழ் ஆங்கிலம் குடியுரிமை சுகாதாரம் கணிதம் செயன்முறைத்தொழினுட்பம் சங்கீதம் பொதுத்தேர்ச்சி 2ம் இடம்<br>சமயம் புவியியல் விஞ்ஞானம் 3ம் இடம் |
| | க.கிசாந் | சித்திரம் 1ம் இடம்<br>விஞ்ஞானம் வரலாறு புவியியல் 2ம் இடம்<br>கணிதம் செயன்முறைத் தொழினுட்பம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| | த.தமிழினி | நடனம் 1ம் இடம்<br>தமிழ் வரலாறு சுகாதாரம் கணிதம் 3ம் இடம் |
| | இ.கஜீபன் | சமயம் 2ம் இடம் |
| | உ.அகிலன் | ஆங்கிலம் குடியுரிமை சங்கீதம் 3ம் இடம் |
| | செ.மகின்சா | நடனம் 2ம் இடம் |
| | ஜெ.கனிஸ்ரன் | சித்திரம் 2ம் இடம் |

| | | |
|---|---|---|
| | சா.நிதர்சன் | சித்திரம் 3ம் இடம் |
| | எ.தனுஸ்ரிகா | நடனம் 3ம் இடம் |
| 9 | க.யனோசிகா | சைவ சமயம் தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம் குடியுரிமை கணிதம் நடனம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம்<br>வரலாறு புவியியல் சுகாதாரம் செய்முறை தொழினுட்பம் 2ம் இடம் |
| | சா.சசீபா | வரலாறு புவியியல் சுகாதாரம் செய்முறை தொழினுட்பம் 1ம் இடம்<br>சைவசமயம் தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம் கணிதம் நடனம் பொதுத்தேர்ச்சி 2ம் இடம் |
| | செ.சாந்தரூபன் | சித்திரம் 1ம் இடம்<br>சமயம் தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம் வரலாறு புவியியல் குடியுரிமை சுகாதாரம் கணிதம் செய்முறை தொழினுட்பம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| | ஈ.கீர்த்தனா | சங்கீதம் 1ம் இடம் |
| | பா.ஜெனோஜன் | சித்திரம் 2ம் இடம் |
| | த.பவரூபன் | சித்திரம் 3ம் இடம் |
| | த.பஜானா | நடனம் 3ம் இடம் |
| | சு.லகிம்சனா | ரோமன் கத்தோலிக்கம் 1ம் இடம்<br>சங்கீதம் 2ம் இடம் |
| 10 | க.சஞ்சிதா | தமிழ் கணிதம் ஆங்கிலம் விஞ்ஞானம் வரலாறு குடியுரிமை நடனம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம்<br>சமயம் சுகாதாரம் 2ம் இடம் |
| | யோ.சங்கீதா | சமயம் சுகாதாரம் சங்கீதம் 1ம் இடம்<br>தமிழ் கணிதம் ஆங்கிலம் விஞ்ஞானம் வரலாறு குடியுரிமை பொதுத்தேர்ச்சி 2ம் இடம் |
| | செ.சனூசியா | சுகாதாரம் சங்கீதம் 2ம் இடம்<br>சமயம் தமிழ் ஆங்கிலம் குடியுரிமை பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| | சு.நிக்சன்றொபேட் | சித்திரம் ரோமன் கத்தோலிக்கம் 1ம் இடம்<br>கணிதம் விஞ்ஞானம் வரலாறு 3ம் இடம் |
| | த.யாழினி | சித்திரம் 2ம் இடம் |
| | இ.கிருசாந்தன் | சங்கீதம் 3ம் இடம் |
| | வ.பிரகாஸ் | சித்திரம் 3ம் இடம் |
| 11 | த.தவக்குமார் | சமயம் தமிழ் வரலாறு குடியுரிமை சங்கீதம் சுகாதாரம் பொதுத்தேர்ச்சி 1ம் இடம்<br>கணிதம் ஆங்கிலம் விஞ்ஞானம் 2ம் இடம் |
| | வி.சுலைக்ஷன் | கணிதம் சித்திரம் விவசாயம் விஞ்ஞானம் 1ம் இடம்<br>சமயம் வரலாறு குடியுரிமை பொதுத்தேர்ச்சி 2ம் இடம்<br>தமிழ் 3ம் இடம் |

| | | |
|---|---|---|
| | இ.ஐஸ்வரியா | சங்கீதம் 2ம் இடம்<br>சமயம் பொதுத்தேர்ச்சி 3ம் இடம் |
| | த.பிரதீபா | ஆங்கிலம் 1ம் இடம்<br>சித்திரம் சுகாதாரம் 2ம் இடம்<br>வரலாறு குடியுரிமை 3ம் இடம் |
| | ம.மதீஸ் | தமிழ் விவசாயம் 2ம் இடம்<br>கணிதம் ஆங்கிலம் சித்திரம் விஞ்ஞானம் 3ம் இடம் |
| | வ.வஜீபன் | சங்கீதம் சுகாதாரம் 3ம் இடம் |
| | ஜெ.கஜீபன் | விவசாயம் 3ம் இடம் |

## இணைபாடவிதான செயற்பாட்டிற்கான பரிசில்கள்

| நிகழ்ச்சி | மாணவர் பெயர் | தரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் | பரிசின் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| சித்திரப்போட்டி | க.ஜிலோசனா | 01 | 2ஆம் இடம் | | | | |
| | ர.அன்பரசன் | 04 | 3ஆம் இடம் | | | | |
| | ச.மயூரி | 05 | 2ஆம் இடம் | 2ஆம் இடம் | | | |
| உளநலநாள் | செ.சாந்தருடன் | 09 | | | | 1ஆம் இடம் | |
| கோலப்போட்டி | சு.சுஜின் | 09 | | | 1ஆம் இடம் | | |
| | க.பௌத்திரா | 06 | | | 1ஆம் இடம் | | |
| சமூகவிஞ்ஞானப் போட்டி | சு.நிக்சன்றொபேட் | 10 | | 1ஆம் இடம் | 1ஆம் இடம் | | |
| விளையாட்டுப்போட்டி | | | | | | | |
| நீளம் பாய்தல் | சி.நெருப்பிரியா | 07 | | 1ஆம் இடம் | | | |
| உயரம் பாய்தல் | ஞா.லக்சிகா | 07 | | 1ஆம் இடம் | | | |
| திருக்குறள் மனனம் | ம.விஷாந்தனா | 01 | 1ஆம் இடம் | | | | |
| | ர.சிவதரணிகா | 02 | 2ஆம் இடம் | | | | |
| | இ.தமிழினி | 03 | 2ஆம் இடம் | | | | |
| குறுநாடகம் | க.சஞ்சிதா | 10 | | 3ஆம் இடம் | | | |
| பேச்சு | த.தவக்குமார் | 11 | | 3ஆம் இடம் | | | |

2015 க.பொ.த (சா/த) பரீட்சை முடிவுகள்

| மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|
| த.தவக்குமார் | A 2B 2C 3S |
| வி.சுலைக்சன் | 2B 3C 3S |
| ம.மதீஸ் | B 3C 4S |
| வ.வஜீபன் | B 2C 3S |
| த.பிரதீபா | 2A 3C S |

## 2016 தரம் - 01 ற்கான மாணவர்களுக்குரிய பரிசில்கள்

**மாணவர் பெயர்**

பா.கதீசன்

த.திவ்வியன்

பா.பவித்திரன்

சு.பவின்சன்

ப.யாழினி

கோ.பைசனா

த.மயூரி

சு.சாணுயா

### சிறப்புப் பரிசில்கள்

- க.பொ.த (சா/த) பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு திருமதி.கனகம்மா.நமசிவாயம் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்றது

  வழங்குபவர் :- திரு.மு.தர்மபாலன்

  பெறுபவர்கள் :- த.தவக்குமார் - 1000/=

  வி.சுலைக்சன் - 1000/=

  ம.மதீஸ் - 1000/=

- திருமதி.கனகம்மா.நமசிவாயம் ஞாபகார்த்தமாக பாடசாலையின் சிறந்த விளையாட்டு வீரர்களுக்குக்கு வழங்கப்படுகின்றது

  வழங்குபவர் :- திரு.மு.தர்மபாலன்

  பெறுபவர்கள் :- சி.நெருப்பிரியா - 1000/=

  ஞா.லக்சிகா - 1000/=

- திரு.திருமதி.அழகம்மா.தில்லைநாதன் அவர்களின் நினைவாக பாடசாலையின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மாணவருக்கா வழங்கப்படுகிறது.

  வழங்குபவர்:- திரு.தி.ரவீந்திரநாதன் (மகன்)

  பெறுபவர்கள்:- க.சஞ்சிதா - 1000/=

  யோ.சங்கீதா - 1000/=

  சு.நிக்சன்றொபேட் - 1000/=

- க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு மாணவர்களுக்கு திருமதி.கனகம்மா.நமசிவாயம் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்றது

  வழங்குபவர் :- திரு.மு.தர்மபாலன்

  பெறுபவர்கள் :- த.தவக்குமார் - 2500/=

  வி.சுலைக்சன் - 2500/=

  ம.மதீஸ் - 2500/=

  த.பிரதீபா - 2500/=

  வ.வஜீபன் - 2500/=

- தரம்.05 இற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் திணைக்களத்தினூடாக சித்தியெய்திய மாணவர்களுக்கு திருமதி.கனகம்மா.நமசிவாயம் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகிறது (இவ்வருடம் 100% சித்தி)

  வழங்குபவர் :- திரு.மு.தர்மபாலன்

  பெறுபவர்கள் :- வ.பானுசா - 500/=

  சி.யதுசன் - 500/=

  ர.சிலக்சன் - 500/=

  ப.ஜனித்தா - 500/=

  அ.வைஸ்ணவி - 500/=

  ர.அன்பரசன் - 500/=

## கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கான ஊக்குவிப்பு நிதி கோரல்

தற்போது எங்கள் பாடசாலையைப் பொறுத்தவரை அவசியமாக உள்ள தேவைகள் சிலவற்றை கீழே பட்டியற்படுத்துகின்றோம்.

- தினந்தோறும் இரவு 6.30 – 9.30 வரையான நேரத்தில் பாடசாலையிலே மாணவர்களின் மேலதிக கற்றலுக்கான ஊக்குவிப்பு மேற்கொள்ளும் முகமாக ஆரம்பப்பிரிவு இடைநிலைப்பிரிவு மேற்பிரிவு இவ் 3 பிரிவுகளுக்கான ஆசிரிய வளவாளர்களை (எமது ஊரிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள்) நியமித்து தலா 5,000/= வீதம் மாதாந்தம் வழங்க உத்தேசித்துள்ளோம்.

- வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கான மேலதிக சீருடை பாதணிகள் என்பவற்றை வருடந்தோறும் வழங்கல் (50,000/=)
- அதிபர் அலுவலகம் தற்காலிகமாக இயங்கி வருவதால் பாதுகாப்பான அலுவலகமாக மாற்றுதல் (Glass Fitting) (150,000/=)
- ஆசிரியர் ஓய்வறை இல்லாத காரணத்தால் தற்காலிக ஆசிரியர் ஓய்வறை நிறுவவேண்டி இருத்தல்
- மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பினை கருத்திற் கொண்டு Multi Media Projector ஒன்றை அன்பளிப்பாக வழங்குதல்
- வகுப்பறைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒவ்வொரு அலுமாரிகளை வழங்க உதவுதல் (7)
- பாடசாலைக்கு வர்ணம் பூசுதல்
- மாணவர்களுக்கான விளையாட்டு முற்றத்தை புதுப்பித்தலும் சீர் செய்தலும் (வர்ணம் பூசுதல் ,மணல் பரவுதல்) (50,000/=)
- வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கான நிதியாக 25,000/= ஐ வழங்கி உதவுதல்
- பாடசாலையின் பிரதான மண்டபத்திற்கு முன்னால் உள்ள நிலப்பிரதேசம் மழை காலங்களில் நீர் தேங்கி நிற்பதால் அதனை கற்கள் பரப்பி சீர்செய்தல். இதற்கான நிதி உதவியாக ரூ 40,000 ஐ வழங்கி உதவுதல்.
- எமது பிரதான மண்டபத்தின் மேல்மாடி அவசியமாக கட்டிமுடிக்கவேண்டி இருப்பதனால் அதற்கான வேலைத்திட்டத்தை விரைவாகச். செயற்படுத்தல்.
- நூலகம்,விஞ்ஞான ஆய்வு கூடம் இரண்டும் தற்போது சாதாரண வகுப்பறையில் இயங்குவதனால் அவற்றிற்கான நிரந்தரக் கட்டடங்களை அமைத்தல்.

அதிபர்

# யா /குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்

## ஒழுக்கவிதிகள்

1. பாடசாலைநேரம்

   தரம் 1–11 மு.ப 7.45 – பி.ப 2.00

2. எல்லாமாணவர்களும் பாடசாலைச் சீருடை அணிந்துவருதல் வேண்டும். பெண்கள் வெண்மை நிறமான சப்பாத்தும், ஆண்கள் கறுப்புநிறச் சப்பாத்தும் அணிந்துவருதல் வேண்டும்.
3. எல்லாமாணவர்களும் நேரத்திற்குவருதல் வேண்டும்.
4. பிந்திவருவோர் மாணவத் தலைவர்களால் அவதானிக்கப்படல் வேண்டும்
5. பாடசாலைச் சொத்துக்கள் கவனமாகப் பேணப்படவேண்டும்.
6. உகந்த சிகை அலங்காரம் பாடசாலையில் அனுமதிக்கப்படும்.
7. தூய்மை கண்டிப்பாக அவதானிக்கப்படும்
8. வகுப்பறைகள் எப்பொழுதும் சுத்தமாகவும் அழகாகவும் பேணப்படல் வேண்டும். காலைப்பிரார்த் தனைக்கோ, நூலகத்திற்கோ, விளையாட்டு மைதானத்திற்கோ அல்லது விருப்பத்திற்குரிய தொகுதிப் பாடத்திற்கோ செல்லும் போது ஒரேநிரலில் செல்ல வேண்டும்.
9. மாணவர் விளையாட்டிலும், மேலதிக செயற்பாட்டிலும் கட்டாயமாகப் பங்குபற்றுதல் வேண்டும். துவிச்சக்கர வண்டியில் வருவோர் பாதை ஒழுங்குகளை கடைப்பிடிக்க வேண்டும். இணையாகச் செல்வதை தவிர்க்கவேண்டும்.
10. பெற்றோர் வெள்ளிக்கிழமைகளில் தமது பிள்ளைகளின் வெளிப்பாடுகள் முன்னேற்றம் குறித்து ஆசிரியரைச் சந்தித்துப் பேசலாம்.

# பாடசாலை கீதம்

வாழ்க விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்
வளர் மதிபோல் அகிலமீதில் புகழ் பரப்பி வாழ்கவே

செந்தமிழும் ஆங்கிலமும் சிறந்தநுண் கலைகளும்
விந்தைபெறும் விஞ்ஞானமும் விளங்குதொழிற் கலைகளும்
சந்ததமும் வாழ்வுதரும் சமயநெறிக் கல்வியும்
தந்துஎமைப் பேணுகின்ற தாயனையாய் வாழ்கவே

பல்வளமும் நிறைந்துபுகழ் பயிலும் குப்பிழான் தனில்
நல்லவர்கள் பலரும் தோற்றநற் பரிதியாயினாய்
எல்லையில் அறிவெனும் இருங்கடல் முகந்துநீ
சொல்லுகொண்டலாய்ப் பொழிந்துநல்லுலகில் வாழ்கவே

சொக்கவளவுகோயில் கொண்டசோதிவிக்கினேஸ்வரர்
நற்பதும் இணையடிகள் நாளும் நாம் வணங்கவே
பக்கமாய் அமைந்துகலைஞானம் வளர் கோவிலாம்
தக்க எமது வித்தியாசாலை தரணி தனில் வாழ்கவே

அன்னைதமிழ் அணங்கினது அமுதமான சுவைபயில்
மன்னுபாலர் கல்விமுதல் வளருமுயர் கல்வியும்
அன்னையே எமக்களித்து ஆத்மஞானம் உதவியே
தன்னிகரில் புகழுடனே தரணிதனில் வாழ்கவே

வாழ்க விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்
வளர் மதிபோல் அகிலமீதில் புகழ் பரப்பிவாழ்கவே
புகழ் பரப்பிவாழ்கவேபுகழ் பரப்பிவாழ்கவே